රාජ්‍ය පරිපාලන හා කළමනාකරණ අමාත්‍යාංශය
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
MINISTRY OF PUBLIC ADMINISTRATION AND MANAGEMENT

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතනය / தொலைபேசி: (94) 011- 2694560 / Telephone
ෆැක්ස් / தொலைநகல்: (94) 011- 2692254 / Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: dgcs@pubad.gov.lk / E-mail
වෙබ් අඩවිය / இணைத்தளம்: www.pubad.gov.lk / Web Site

මගේ අංකය / எனது இல / My No: CS/ICTS/01/Training Programs
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2017.09.11

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாவட்ட செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப் பாடநெறிகளை ஒழுங்குசெய்தல்.**

மேற்படி எனது இலக்கம் மற்றும் 2017/08/08 ஆம் திகதி கடிதத்தின் விடயம் தொடர்பாக.

02. இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை உத்தியோகத்தர்களுக்காக அடையாளப்படுத்திய பயிற்சிப் பாடநெறிகளுக்கு உத்தியோகத்தர்களை தெரிவுசெய்வதற்கான எழுத்துப் பரீட்சை **2017.09.23 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு கொழும்பு புனித பீட்டர்ஸ் கல்லூரியில்** நடாத்துவதற்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

03. இப்பரீட்சைக்கான அனுமதி அட்டையை கீழே கொடுக்கப்பட்டுள்ள இணையத்தள முகவரியினூடாக தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளிடுவதன் மூலம் பதிவிறக்கம் செய்ய முடியும். இவ் இணையத்தள முகவரிக்குரிய இணைப்பு இவ்வமைச்சின் இணையத்தளத்தில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், பூர்த்தி செய்த அனுமதி அட்டையுடன் உரிய தினத்தில் பரீட்சைக்கு தோற்றுவதற்கும் அவர்களுக்கு தயவுசெய்து அறியப்படுத்தவும்.

**அனுமதி அட்டையை பெறவேண்டிய இணையத்தள முகவரி: http://203.94.94.214/CS-ICTSERVICE**

04. பயிற்சியின் தேவையை அடையாளம்காண மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் விண்ணப்பித்த இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் சகல உத்தியோகத்தர்களும் இப்பரீட்சையில் கலந்துகொள்வது கட்டாயமானதுடன் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு அவர்களை இயலச் செய்யும் பொருட்டு அவர்களுக்கு கடமை விடுமுறை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கவும். இது குறித்து உத்தியோகத்தர்களுக்கு பிரயாணச் செலவுகள் வழங்கப்படமாட்டாது.

05. இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை உத்தியோகத்தர்களின் தொழில்சார் திறன் அபிவிருத்திக்காக ஆரம்பிக்கப்படவுள்ள இந்நிகழ்ச்சித்திட்டம் வெற்றியடைய தங்களால் வழங்கப்படும் ஒத்துழைப்பை மேலானதாக கருதுகின்றேன்.

**ஒப்பம்: கே. வீ. பீ. எம். ஜே. கமகே**
இணைந்த சேவை பணிப்பாளர் நாயகம்